OM MURUGA

இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

LONDON SRI MURUGAN TEMPLE

Registered Charity No: 1190790

78 CHURCH ROAD, MANOR PARK LONDON E12 6AF

TEL: 020 8478 8433

E-mail:admin@londonsrimurugan.org | www.londonsrimurugan.org

# ஸ்ரீ ஜெய துர்க்காதேவி மஹா சண்டி ஹோமம்

உலகத்தின் தாயாகவும், உமையொரு பாகனின் நாயகியாகவும் விளங்கி ஆன்மாக்கள் போகங்களை அனுபவித்து பேரின்பமடைய வழிகாட்டி வரமருளும் அன்னை பராசக்தியானவள் ஸ்ரீ துர்கா, ஸ்ரீ லட்சுமி, ஸ்ரீ சரஸ்வதி முதலான அநேக சக்தி வடிவங்களாக நமக்கு காட்சி தந்து அருள் புரிகின்றாள். தேவியினுடைய மஹா பராக்ரம வீரதீர செயல்களை பல்வேறு புராணங்கள் எடுத்துரைத்தாலும் எளிமையாகவும் எல்லோருக்கும் புரியும் வண்ணமும் மார்க்கண்டேய புராணத்தில் அருளப்பட்டது தேவி மஹாத்ம்யமாகும்.

இதிலுள்ள மந்திரமயமான 700 சுலோகங்களை கற்ற உபதேசம் பெற்ற ஆசாரியர்கள் முறையாக வாசித்து பால் எள் சேர்த்த பாயசான்னத்தை அக்னியில் ஹோமம் செய்து சண்டிகாதேவி ஸ்வரூபமான தேவியினுடைய அருளை பெறுவதே சண்டிமஹாயாகமாகும்.

கலியுகத்தில் உடனே பலன்தரக்கூடிய இந்த யாகமானது லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் எழுந்தருளி அருள் புரியும் ஸ்ரீ ஜெய துர்கா தேவியின் திருவருளால் கடந்த 36 ஆண்டுகளாக ஆலய அறங்காவலர்களின் பெரு முயற்சியிலும் , பக்தப் பெருமக்களின் பேருதவியினாலும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

உலக நன்மைக்காக லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் எதிர்வரும் **21.06.2024** வெள்ளிக்கிழமை பௌர்ணமியன்று நடைபெறும், 37 வது மஹா சண்டிஹோமத்தில் பங்குபெற்று, கலந்துகொண்டு தரிசித்து

ஸ்ரீ ஜெயதுர்கா தேவியின் பேரருளை பெற்று வாழ்க்கையில் எல்லாவித போக யோகங்களையும் பெற்று பதினாறுபேறுகளோடு பெருவாழ்வு வாழ வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

சண்டி யாகத்தில் கலந்து கொள்பவர்கள் **£25** செலுத்தி ஆலய அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பூஜை யாகம் பிரசாதம் இவற்றுக்கான பொருள்களை வாங்கி அளிக்க விரும்பும் பக்தர்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

## நிகழ்ச்சி நிரல்

**20.06.2024**

- **காலை** : அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை  கணபதி ஹோமம்
- **மாலை:** கலசஸ்தாபனம் தேவி மஹாத்ம பாராயணம்
- தீபாராதனை

**21.06.2024:**

- யாக பூஜை
- சண்டி ஹோமம் ஆரம்பம்
  சுவாஸினீ, கன்னிகை வடுக பூஜை
- யாகத்தில் சௌமாங்கல்ய த்ரவ்ய  சமர்ப்பணம்
- வஷோ;த்தாரா  ஹோமம்
- மஹா பூர்ணஹூதி மஹா தீபாராதனை
- ஜெய துர்கா தேவி கலசாபிஷேக பூஜை
- தீபாராதனை
- பிரசாதம் வழங்குதல்
- மஹாபிரசாதம்
- 

## SRI JAYA DURGA DEVI MAHA CHANDI HOMAM

We are going to perform 37th year Maha Chandi Homam on Friday 21st June 2024. Who wish to partake in this event by paying £25 in Temple Ticket Counter.

Board of Trustees
London Sri Murugan Temple